தினமலர்

# ஆத்தூர் பகுதியில் செங்கரும்பு விளைச்சல்...கடும் பாதிப்பு! நோய் தாக்கியதால் விவசாயிகள் புலம்பல்

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2012,05:59 IST

ஆத்தூர்: தைப்பொங்கல் பண்டிகையின் அடையாளமான, செங்கரும்பு விளைச்சல், கடுமையாக பாதித்துள்ளது. அறுவடைக்கு மூன்று மாதம் உள்ள நிலையில், நோய் தாக்குதல் காரணமாக, "சொத்தை' விழுந்து வருவதால், செங்கரும்பு விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

தமிழர்களின் முக்கிய பண்டிகையான, தைப்பொங்கல் பண்டிகை, வெகுவிமரிசையாக கொண்டாடப்படுவது வழக்கம். தை பொங்கல் பண்டிகையின் அடையாளமாக, பொங்கல் படையலுடன், "செங்கரும்பு' வைத்து பூஜை செய்து, ருசி பார்ப்பது வழக்கம்.

அதன்படி, சேலம் மாவட்டத்தில், ஆத்தூர், தலைவாசல், மணிவிழுந்தான், காட்டுக்கோட்டை, வீரகனூர், பைத்தூர் ரோடு, மேச்சேரி, நங்கவள்ளி உள்ளிட்ட பகுதிகளில், அதிகளவில் செங்கரும்பு விளைவிக்கப்படுகிறது. இங்கு விளைவிக்கப்படும், செங்கரும்பு, "ருசி' மிகுந்து இருப்பதால், சேலம், விழுப்புரம் உள்பட, பல்வேறு மாவட்ட பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள், அதிகளவில் வாங்கிச் செல்கின்றனர்.

டிசம்பர், ஜனவரி மாதத்தில், பொங்கல் பண்டிகையையொட்டி, செங்கரும்பு அறுவடை செய்யப்படும். அறுவடைக்கு, மூன்று மாதம் உள்ள நிலையில், நோய் தாக்குதல் காரணமாக, கரும்பில் அதிகளவு சொத்தை விழுந்து வருகிறது. செங்கரும்பு விளைச்சல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால், ஆத்தூர் பகுதி விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

இதுகுறித்து, ஆத்தூர், மணிவிழுந்தான் கிராமத்தை சேர்ந்த செங்கரும்பு விவசாயிகள் கூறியதாவது:

சர்க்கரை ஆலை கரும்புகளுக்கு, போதிய விலை கிடைக்காததால், சமீப காலமாக, பொங்கல் பண்டிக்கைக்கு பயன்படுத்தும், ரஸ்தாலி கரும்பு எனும், செங்கரும்பு பயிரை, விவசாயிகள், ஒரு ஏக்கர் முதல், இரண்டு ஏக்கர் வரை, பயிர் செய்து வருகின்றனர்.

செங்கரும்பு விதைக் கரனைகள், தலா, மூன்று ரூபாய்க்கு வாங்கி வந்து, ஏக்கருக்கு, 30 ஆயிரம் கரனைகள் நடப்பட்டன. இதில், ஒரு கரனையில், இரண்டு கரும்பு வீதம், 12 மாதங்களில், ஏக்கருக்கு, 60 ஆயிரம் கரும்பு விளைச்சல் வரும். தற்போது, பருவ மழை இல்லாததால், வளர்ச்சி குறைந்தும், நோய் தாக்குதல் ஏற்பட்டு வருகிறது.

நோய் தாக்குதலால், கரும்பு கனுக்களின் இடையில், சொத்தை விழுந்து வருகிறது. பாதிக்கு பாதி,

கரும்புகளில், சொத்தை விழுந்துள்ளதால், போதிய விளைச்சல் இல்லை. பொங்கல் பண்டிகைக்கு, மூன்று மாதம் உள்ள நிலையில், செங்கரும்புகளில் நோய் தாக்குதல் ஏற்பட்டு வருவதால், போதிய வருவாய் கிடைக்காத நிலை, எங்களுக்கு ஏற்பட்டுள்ளது.
செங்கரும்புக்கு, வேளாண் துறை மூலம் மானியம் உள்ளிட்ட உதவிகள் வழங்காததால், கரும்பு பயிர் செய்துள்ள விவசாயிகள், கண்ணீர் வடித்து வருகிறோம்.
இவ்வாறு கூறினர்.

## தமிழகம், கேரளாவில் முட்டை விலை 349 காசுகளாக நிர்ணயம்

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2012,06:06 IST

நாமக்கல்: தமிழகம், கேரளாவில், முட்டை விலை, 349 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இரு தினங்களில், முட்டை விலை ஒன்பது காசு ஏற்றம் கண்டிருப்பது, கோழிப்பண்ணையாளர்கள் மத்தியில், மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 345 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, நான்கு காசு உயர்த்தி, 349 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை, இரு தினங்களில், ஒன்பது காசு உயர்ந்துள்ளது. இது, கோழிப்ணையாளர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
நாட்டின் பிற மண்டலங்களில், முட்டை விலை நிலவரம்:
சென்னை, 350 காசுகள், பெங்களூரு, 345 காசுகள், மைசூரு, 338 காசுகள், ஹைதராபாத், 321 காசுகள், மும்பை, 353 காசுகள், விஜயவாடா, 319 காசுகள், கோல்கத்தா, 380 காசுகள், பார்வாலா, 332 காசுகள், டில்லி, 344 காசுகள்.
இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 45 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை கிலோ, 58 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## பட்டு வளர்ச்சி துறை திட்டங்கள் ஆய்வு

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2012,05:43 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், பட்டு வளர்ச்சி துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் மற்றும் செயலாக்கத்தை கலெக்டர் லில்லி பார்வையிட்டு ஆய்வு செய்தார்.
தர்மபுரி ஒன்றியம், சோகத்தூரில் உள்ள பட்டு முட்டை உற்பத்தி வித்தகத்தை பார்வையிட்டு, அங்கு முட்டை உற்பத்தி செய்து வழங்கப்படும் விபரங்களை கேட்டறிந்தார். இந்தாண்டு, மாவட்டத்தில், தர்மபுரி மற்றும் பென்னாகரம் பகுதிகளுக்கு தலா, 3 லட்சம் பட்டு முட்டை உற்பத்தி செய்து வழங்கிட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருப்பதாக பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குனர் ஜெயக்குமார் தெரிவித்தார்.
விவசாயிகளுக்கு தரமான பட்டு கூடுகளை உற்பத்தி செய்து வழங்கிட அலுவலர்களுக்கு கலெக்டர் அறிவுரை வழங்கினார். தர்மபுரி பட்டு கூடு அங்காடியை பார்வையிட்டு, பட்டு கூடு அங்காடியில் ஏலம் விடும் முறை குறித்து கேட்டறிந்தார். அப்போது, பட்டு கூட்டின் தரத்துக்கு ஏற்ப வெண்பட்டு கூடு, கலப்பின பட்டு கூடு ஏலம் விடப்படுகிறது. இந்த விலை காஞ்சிபுரம் அண்ணா பட்டு பரிமாற்றகத்தில் தினசரி பட்டு நூல் விற்பனை சராசரி விற்பனை விலையை அடிப்படையாக கொண்டு நிர்ணயம் செய்யப்படுகிறது என பட்டு வளர்ச்சி துறை ஊழியர்கள் தெரிவித்தனர்.
தொடர்ந்து, தர்மபுரி, மதிக்கோன்பாளையம் வேதவல்லி மஞ்சள் பட்டு கூடு நூற்பு மையம், காயத்திரி என்பவரின் வெண்பட்டு கூடு உற்பத்தி மையத்தை பார்வையிட்டு, மைய செயல்பாடுகள் குறித்து கலெக்டர் லில்லி கேட்டறிந்தார். மொரப்பூர் ஒன்றியம் வகுத்தம்பட்டியில், பட்டு வளர்ச்சி துறை சார்பில், 50 சதவீத மானியத்தில், ராஜா என்ற விவசாயிக்கு வழங்கப்பட்ட பட்டு கூடு வளர்ப்பு கூடத்தினையும், அப்பகுதியில் உள்ள விவசாயிகளின் மல்பரி செடி தோட்டங்களையும் ஆய்வு செய்தார்.

## உழவர் சந்தையில் சுழற்சி முறையில் கடை வழங்க விவசாயிகள் கோரிக்கை

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2012,05:43 IST

தர்மபுரி: "தர்மபுரி உழவர் சந்தையில், விவசாயிகளுக்கு, சுழற்சி முறையில் கடைகள் வழங்க வேண்டும்' என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
தர்மபுரி மாவட்டத்தில், தர்மபுரி, ஒட்டப்பட்டி, பாலக்கோடு, பென்னாகரம், அரூர் ஆகிய பகுதிகளில், உழவர் சந்தைகள் உள்ளன. இதில், ஒட்டப்பட்டி, பாலக்கோடு, பென்னாகரம், அரூர் ஆகிய உழவர் சந்தைகளில், தலா, 25 கடை, தர்மபுரி உழவர் சந்தையில், 74 கடைகள் உள்ளன.

விவசாயிகள், தங்கள் நிலங்களில் சாகுபடி செய்யப்படும் காய்கறிகள் மட்டும், இங்கு பொதுமக்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட விலையில் விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டு வருகிறது.
விவசாயிகள், தங்கள் பதிவு செய்துள்ள காய்கறிகள், ஒரு குறிப்பிட்ட சில மாதங்களுக்கு மட்டுமே வரும் நிலையில், அந்த காய்களை, அவர்கள் தொடர்ந்து மார்க்கெட்டில் இருந்து வாங்கி விற்பனை செய்யும் இடைத்தரகர்களாகவும், வியாபாரிகளாக மாறியுள்ளனர்.
இதனால், காய்கறிகள், வெளிமார்க்கெட்டில் விற்கும் விலையை போல், உழவர் சந்தையில் விற்கப்படுகிறது. "மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில், உழவர் சந்தையில் உள்ள கடைகளை, அதிகாரிகள், விவசாயிகளுக்கு சுழற்சி முறையில் வழங்க வேண்டும்' என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
* பழுதாகும் தராசு: தர்மபுரி உழவர் சந்தையில், அலுவலகம் தாழ்வாகவும், ஜன்னல்கள் கண்ணாடி உடைந்த நிலையிலும் உள்ளது. இதனால், மழைக் காலங்களில் தண்ணீர், அலுவலக வளாகத்தில் புகுந்து விடுவதால், அங்கு வைக்கப்படும் எலக்ட்ரானிக் தராசுகள் பழுதாகும் நிலை உள்ளது.

**தகளின் தரம் கெடாமல் பராமரிப்பு : ÷ வளாண் உதவி இயக்குனர் அறிவுரை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2012,06:13 IST

ஈரோடு ""உற்பத்தி செய்யப்பட்ட விதைகள் தரம் கெடாமல், விவசாயிகளை சென்றடையும் வகையில் பாதுகாக்க வேண்டும்,'' என, விதைச்சான்று உதவி இயக்குனர் மகாதேவன் பேசினார்.
ஈரோடு மாவட்ட விதைச் சான்றளிப்பு துறை சார்பில் அட்மா திட்டத்தில் பெருந்துறை, சென்னிமலை யூனியனை சார்ந்த வேளாண் துறை, தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கான விதைச்சான்று நடைமுறை பயிற்சி பெருந்துறை யூனியன் கூட்ட அரங்கில் நடந்தது.
பெருந்துறை விதைச்சான்று அலுவலர் சிவக்குமார் வரவேற்றார். ஈரோடு மாவட்ட விதைச்சான்று உதவி இயக்குனர் மகாதேவன் பேசியதாவது:
விவசாயிகளுக்கு தரமான விதைகள் கிடைக்க வேண்டும். தரமான விதைகள் என்பது, அதிகபட்ச முளைப்புத் திறன், புறத்தூய்மை, இனத்தூய்மை மற்றும் அளவான ஈரப்பதம் கொண்டவை.
சான்று செய்யப்பட்ட விதைக்குவியல்களை நல்ல முறையில் இருப்பு வைத்து பராமரித்தால்தான் அதன் முளைப்புத்திறன் மாறாமல் இருக்கும். விதை உற்பத்தியாளர்கள், விதைக்குவியல்களை நல்ல காற்றோட்டமான இடங்களில் சுவரை விட்டுத்தள்ளி, அட்டகங்கள் இட்டு, ரக மற்றும் குவியல் வாரியாக அடுக்கி வைக்க வேண்டும். விதைக் குவியல்களில் பூச்சி தாக்காதவாறு முறையாக பூச்சி மருந்து தெளித்து தூய்மையாக வைத்திருக்க வேண்டும்.

உற்பத்தி செய்யப்பட்ட விதைகளின் தரம், விவசாயிகளை சென்றடையும் வரையில் பாதுகாக்க வேண்டும். பயிற்சியில் அனைத்து விதைச்சான்று நடைமுறைகளை நன்கு தெரிந்து, விதைப்பறிக்கைகள், விதைப்பண்ணைகள் தள்ளுபடி ஆகாதவாறு பணிகள் மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

விதைச்சான்று அலுவலர் (தொழில்நுட்பம்) சாமுவேல், விதைச்சான்று அலுவலர்கள் ஈரோடு மோகனசுந்தரம், காங்கேயம் கோவிந்தசாமி, விதை ஆய்வாளர் சரவணன், வேளாண் அலுவலர் யசோதா ஆகியோர் பேசினர்.

துணை வேளாண் அலுவலர் பாலசுப்பிரமணியம் நன்றி கூறினார்.

## பூந்தோட்ட அமைப்பாளர் பயிற்சி

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 07,2012,22:11 IST

ஊட்டி:தோட்டக்கலை துறை உழவர் பயிற்சி நிலையத்தில், பூந்தோட்ட அமைப்பாளருக்கான பயிற்சி பெற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

நீலகிரி மாவட்ட தோட்டக்கலை இணை இயக்குனர் அலுவலக செய்திக்குறிப்பு:உழவர் பயிற்சி நிலையத்தின் மூலம் பூந்தோட்ட அமைப்பாளருக்கு 6 மாத காலம் பயிற்சி அக்டோபர் மாதம் அளிக்கப்படுகிறது. மாதந்தோறும் பயிற்சி கால உதவித்தொகை வழங்கப்படும்.6 மாத கால பயிற்சிக்கு 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்; 25 வயதுக்கு உட்பட்ட நீலகிரி மாவட்டத்தை சேர்ந்தவர்கள் வரும்12ம் தேதி வரை அனைத்து வேலை நாட்களிலும் அலுவலக நேரத்தில் ஊட்டி தோட்டக்கலை துணை இயக்குனர் உழவர் பயிற்சி நிலைய அலுவலகத்தில் 50 ரூபாய் ரொக்கமாக செலுத்தி விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளலாம்.பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் தோட்டக்கலை துணை இயக்குனர், உழவர் பயிற்சி நிலையத்திற்கு 18ம் தேதி மாலை 5.45 மணிக்குள் அனுப்ப வேண்டும்.பயிற்சி பெற்றவர்களுக்கு அரசு பணி வழங்குவதற்கு உத்தரவாதம் கிடையாது. மேலும் விபரங்களுக்கு தோட்டக்கலை இணை இயக்குனர் அலுவலகத்தின் கீழ் செயல்படும் உழவர் பயிற்சி நிலையம் தோட்டக்கலை துணை இயக்குனரை அணுகலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பயிற்சி முகாம்

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2012,02:04 IST

கருத்தை பதிவு செய்ய

ரெட்டியார்சத்திரம்:ரெட்டியார்சத்திரம் தோட்டக்கலை பண்ணையில், விதை மற்றும் அங்க சான்றளிப்பு துறையின் அட்மா பயிற்சி முகாம் நடந்தது.

வத்தலக்குண்டு விதை ஆய்வாளர் சேட்முகமது வரவேற்றார். கரூர் விதை ஆய்வு துணை இயக்குனர் ரங்கராஜன் தலைமை வகித்தார்.

விதைச்சட்ட அமலாக்கம் மற்றும் முக்கியத்துவம், விற்பனையை நெறிமுறைப்படுத்தல், விதை சட்ட மீறல் தண்டனைகள், தரமான விதைகள் உற்பத்தி வழிகள் குறித்து விளக்கப்பட்டது.விதை ஆய்வாளர்கள் உமா, சேட்முகமது, காசிராஜன் ஆகியோர், விதைப் பரிசோதனையின் முக்கியத்துவம், விதைச் சட்ட அறிமுகம், விற்பனை உரிமம் குறித்து விளக்கினர். வேளாண்மை, தோட்டக்கலை அதிகாரிகள் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

## சிறு விவசாயிகள் பட்டியல் தயாரிப்பு

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2012,04:16 IST

தேவதானப்பட்டி:மாவட்டம் முழுவதும் உள்ள சிறு, குறு விவசாயிகளின் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. வேலை உறுதி திட்டத்தில் பணியாற்றும் பணியாளர்களை சிறு, குறு விவசாயிகளின் தோட்டங்களுக்கு வேலைக்கு அனுப்பி வைக்கலாம், என அரசு உத்தரவிட்டுள்ளது. இதனை தொடர்ந்து விவசாயத்துறையும், தோட்டக்கலைத்துறையும் அனைத்து ஊர்களிலும் உள்ள சிறு, குறு விவசாயிகளின் பட்டியலை தயாரித்துள்ளனர். தற்போது சோதனை முறையில் 16 ஊராட்சிகளில் மட்டும் வேலை உறுதி திட்ட பணியாளர்கள் விவசாய பணிகளுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளனர்.

எனவே அந்த 16 ஊராட்சிகளில் உள்ள விவசாயிகளின் பட்டியல் மட்டும் கிராம ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவர்கள் கிராம சபையில் அங்கீகாரம் பெற்ற பின்னரே இந்த விவசாயிகளின் தோட்டங்களுக்கு பணியாளர்கள் அனுப்பி வைக்கப்பட உள்ளனர். இத்திட்டம் மாவட்டம் முழுவதும் விரிவாக்கப்படும் வாய்ப்புகள் உள்ளதால், அனைத்து ஊராட்சிகளிலும் உள்ள சிறு, குறு விவசாயிகளின் பட்டியல்கள் முழு அளவில் தயாரிக்கப்பட்டுள்ளது. மாவட்ட

நிர்வாகம் உத்தரவிட்டதும்,இந்த பட்டியல்கள் ஊராட்சிகளிடம் வழங்கப்படும் ,என அதிகாரிகள் தெரிவித்தனர்.

**சூரியகாந்தி, எள் அறுவடை இருப்பு வைக்க ஆலோசனை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2012,04:11 IST

தேனி:தேனி மாவட்டத்தில் சூரியகாந்தி, எள் அறுவடை தொடங்கி உள்ளது. இவற்றை இருப்பு வைத்து விற்கலாம், என தேனி விற்பனைக்குழு ஆலோசனை வழங்கி உள்ளது. கம்பம், உத்தமபாளையம், சின்னமனூர் பகுதிகளில் சூரியகாந்தி, எள் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது அறுவடை துவங்கி உள்ளது. இந்த விளைபொருட்களை இருப்பு வைத்து நல்ல விலை கிடைக்கும் போது விற்பனை செய்ய வேண்டும், என தேனி விற்பனைக்குழு ஆலோசனை வழங்கி உள்ளது.விற்பனைக்குழு செயலாளர் முருகன் கூறியதாவது: சூரியகாந்தி, எள் ஆகிய விளை பொருட்களை இருப்பு வைத்து விற்பதன் மூலம் அதிக விலை கிடைக்கும்.

இருப்பு வைக்கும் விளை பொருட்களின் மதிப்பில் 75 சதவீதத்தை விவசாயிகள் கடனாக பெறலாம். அதிகபட்சம் 2 லட்சம் ரூபாய் வரை, 5 சதவீத வட்டியில் பொருளீட்டு கடன் வழங்கப்படுகிறது. விவசாயிகள் அதிகபட்சமாக 120 நாட்களுக்கும், சிறப்பு அனுமதியின் பேரில் 180 நாட்களுக்கும் பொருளீட்டு கடன் சலுகை பெறலாம். கம்பம், சின்னமனூர், உத்தமபாளையம் பகுதி விவசாயிகள் பொருளீட்டு கடன் பெற, கம்ப்யூட்டர் சிட்டா, அடங்கல் மற்றும் இருப்பிட சான்றுடன், கம்பம் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளரை தொடர்பு கொள்ளலாம்,என்றார்.

**வேளாண் பணிமனை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 08,2012,01:38 IST

அருப்புக்கோட்டை:அருப்புக்கோட்டை கோவிலாங்குளம் வேளாண் அறிவியல் நிலையத்தில், விருதுநகர் மாவட்ட வேளாண் துறை அலுவலர்களுக்கு, தொழில் நுட்ப பணிமனை கூட்டம் நடந்தது. இணை இயக்குனர் முருகதாஸ் தலைமை வகித்தார். துணை இயக்குனர் வன்னியராஜன் முன்னிலை வகித்தார். வேளாண் மாநில திட்ட துணை இயக்குனர் கனகராஜன் பேசினார். 11 ஒன்றிய வேளாண் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

=

தினமணி

# தமிழ்நாடு விவசாயிகள் சங்க வட்ட மாநாடு

First Published : 07 Sep 2012 11:00:34 AM IST

கும்மிடிப்பூண்டி, செப். 6: கும்மிடிப்பூண்டி அடுத்த பெரியபாளையத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் ஊத்துக்கோட்டை வட்ட மாநாடு புதன்கிழமை நடைபெற்றது.

÷பெரியபாளையத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டுக்கு வட்டச் செயலாளர் பெ.ரவி தலைமை தாங்கினார். முருகேசன் வரவேற்றார். விவசாய சங்க மாவட்டச் செயலாளர் துளசி நாராயணன் துவக்க உரையாற்றினார். மாவட்டத் தலைவர் எஸ்.எம்.ஹனீப், மாவட்ட நிர்வாகிகள் எம்.பழனி. சி. ரவிச்சந்திரன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஒன்றிய கவுன்சிலர் சம்பத் வாழ்த்திப் பேசினர்.

÷மாநாட்டில் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்ட விவசாயிகள் சங்க மாநில பொதுச் செயலாளர் பி.சண்முகம் சிறப்புரையில் விவசாயிகளுக்கு ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ.2 ஆயிரம் வழங்க வேண்டும் என்றார்.

÷÷மாநாட்டில் பெரியபாளையத்தில் நெல் கொள்முதல் நிலையம் அமைத்தல், விவசாயிகள் வாங்கிய வங்கி கடன்கள் அனைத்தையும் ரத்து செய்து புதிதாக கடன் வழங்குதல், விவசாய பம்பு செட்டுகளுக்கு புதிய மின் இணைப்பு வழங்குதல், விவசாயத்துக்கு சீரான மின்சாரம் வழங்குதல், வடமதுரை ஏரியில் சென்னை மாநகராட்சியின் குப்பைகளை கொட்டக்கூடாது, மாலந்தூர் பகுதியில் ஆரணி ஆற்றின் அருகே தரைப்பாலம் அமைத்தல் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

÷மேலும் மாநாட்டில் விவசாயிகள் சங்க ஊத்துக்கோட்டை வட்டத்தின் புதிய தலைவராக ஜி.முனுசாமி, செயலாளராக எம்.முருகேசன், பொருளாளராக கிரிவர்த்தனராவ் உட்பட 25 பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## வறட்சியால் வாடும் கால்நடைகள்

First Published : 07 Sep 2012 01:15:32 PM IST

ஆலங்குடி, செப். 6: ஆலங்குடி பகுதியில் வைக்கோல் தட்டுப்பாடு, வறட்சி காரணமாக மேய்ச்சல் நிலங்களின்றி கால்நடைகள் அவதிப்படும் நிலை உள்ளது.

புதுக்கோட்டை மாவட்டமானது விவசாயம் நிறைந்த பகுதியாகும். அதிகமான ஆழ்குழாய்க் கிண்றுகளைக் கொண்ட இப்பகுயில் பயிர் சாகுபடியுடன், கால்நடைகளும் அதிகம் வளர்க்கப்படுகின்றன.

ஆகையால், புதுக்கோட்டை மாடு சந்தைக்கு பிரசித்தி பெற்றதாகும். இந்நிலையில், ஆலங்குடி பகுதிக்கு நாளொன்றுக்கு 20 மணிநேரம் வழங்கிய மும்முனை மின்சாரம் தற்போது 3 மணிநேரமாக குறைக்கப்பட்டதாலும், இம்மாவட்டத்தில் டெல்டா பகுதிக்கு காவிரி நீர் விநியோகிக்காததாலும் நெல் சாகுபடி முற்றிலுமாக தடைபட்டுள்ளது. மேலும், உளுந்து, சோளம் உள்ளிட்ட பயிர் சாகுபடியும் தடைபட்டதால் கால்நடைகளைப் பராமரிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து விவசாயி வடகாடு முத்துநாதன் கூறியது:

பல ஆண்டுகளாக கால்நடைகளை வளர்த்து வந்தேன். ஆனால், இந்த வருடம் தீவனப் பயிருக்குக்கூடத் தண்ணீர் பாய்ச்சுவதற்கு மின்சாரம் இல்லாததால் அவைகளும் கருகிவிட்டன. வைக்கோல் கிடைக்கலை. தீவனம் பலமடங்கு விலை உயர்ந்துவிட்டது. அதற்கேற்ப பால் விலை இல்லை. ஆகையால், மாடுகளை அடிமாடு விலைக்கு விற்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. பிழைப்புக்கு வேறு இடத்தில் வழிதேட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்றார் அவர்.

## வேப்பந்தட்டையில் நாளை வட்டியில்லா பயிர்க் கடன் முகாம்

First Published : 07 Sep 2012 01:12:06 PM IST

பெரம்பலூர், செப். 6: வேப்பந்தட்டையில் சனிக்கிழமை (செப். 8) வட்டியில்லா பயிர்க்கடன் வழங்கும் முகாம் நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் தரேஸ் அகமது வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பெரம்பலூர் மாவட்ட நிர்வாகம், திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் கூட்டுறவுத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் சார்பில், வட்டியில்லா பயிர்க் கடன் வழங்கும் முகாம் நடைபெறுகிறது.

அதன்படி, வேப்பந்தட்டை ஒன்றியத்துக்கு உள்பட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில், வேப்பந்தட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் கடன் வழங்கும் முகாம் சனிக்கிழமை நடைபெறுகிறது.

முகாமில் பங்கேற்க உள்ள விவசாயிகள் தங்களது குடும்ப அட்டை அல்லது வாக்காளர் அடையாள அட்டை, 3 பாஸ்போர்ட் அளவு போட்டோ, சிட்டா நகல், சொத்து பொறுப்பு பட்டியல், தடையில்லா சான்று, 10 சதவீத பங்குத்தொகை, ஒரு ஜாமீன் பொறுப்பாளர் மற்றும் அவருக்கான ஆவணங்கள் ஆகியவற்றை கொண்டுவர வேண்டும்.

ஏற்கெனவே பயிர்க் கடன் பெற்று தவணை செலுத்த தவறியவர்கள், கடனை வட்டியுடன் திருப்பி செலுத்திவிட்டு புதிய பயிர்க் கடன் பெற்றுக்கொள்ளலாம். விவசாயிகள் தவணை தேதிக்குள் அசலை திருப்பி செலுத்தினால் வட்டி செலுத்த தேவையில்லை. தவணை தேதிக்கு பின்னர் செலுத்தினால், சங்க நடமுறைகளுக்கு உள்பட்டு வட்டி செலுத்த வேண்டும்.

எனவே, முகாமில் வேப்பந்தட்டை வட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் கலந்துகொண்டு வட்டியில்லா பயிர்க்கடனைப் பெற்று பயன்பெறலாம்.

## பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 47.40 அடி

First Published : 07 Sep 2012 01:42:31 PM IST

ஈரோடு, செப்.6: பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரபடி 47.40 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 5,793 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 200 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. கால்வாயில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 3.42 டி.எம்.சி.

## ஈரோடு மாவட்டத்தில் 15 இடங்களில் உரக்கட்டுப்பாட்டு அறைகள் அமைப்பு

First Published : 07 Sep 2012 01:40:33 PM IST

ஈரோடு, செப்.6: ஈரோடு மாவட்டத்தில் 15 இடங்களில் உரக்கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளதாக ஈரோடு வேளாண்மை இணை இயக்குநர் க. கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வியாழக்கிழமை வெளியிட்ட செய்தி:

ஈரோடு மாவட்டத்தில் உரக்கட்டுப்பாட்டு அறை ஈரோடு தலைமையிடம், 14 வட்டாரங்களிலும் மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் 6 வட்டாரங்களிலும் அமைக்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்ட இணை இயக்குநர் அலுவலகத்தில் உள்ள கட்டுப்பாட்டு அறை வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) தலைமையில் செயல்பட்டு வருகிறது. (தொலைபேசி எண்: 94434 57659, 0424-2339101).

வட்டார அளவில் உரம் சம்மந்தமான இருப்பு விவரங்கள், தேவை விவரங்கள் மற்றும் இதர பிரச்னைகளை தெரிவிக்கலாம். இக்கட்டுப்பாட்டு அறை காலை 10 முதல் மாலை 6 மணி வரை செயல்படும்.

வட்டார அளவில் கீழ்க்கண்ட அதிகாரிகளை விவசாயிகள் தொடர்புகொள்ளலாம்.

ஈரோடு-சண்முகசுந்தரம் (0424 - 2339027), மொடக்குறிச்சி-குழந்தைவேல் (0424 - 2920045), கொடுமுடி-ஆர்.சாவித்திரி (04204-222070), பெருந்துறை- பி.எஸ்.திருமூர்த்தி (04294-220066), சென்னிமலை-எஸ்.வாசுதேவன் (04294-252399), ஊத்துகுளி-எஸ். வேலுசாமி (04294-260144), தாராபுரம்-வெங்கடாசலம் (04258-224542), குண்டடம்- ராஜேந்திரன் (04258-263111), மூலனுர்-ஞானசேகரன் (04202-228881),
காங்கேயம்-அரசப்பன் (04257-230344), வெள்ளகோயில்-மாணிக்கம் (04257-263510), கோபி-ஏ.என்.ஆசைதம்பி (04285-221777), டி.என்.பாளையம்-ஏ.எல்.பாபு (04285-262262), நம்பியூர்-எம். விவேகானந்தன் ( 04285-268138), சத்தி-ஜெயவேலு (04295-223930), சத்தியமங்கலம்-முருகேசன் (04295 - 241222), தாளவாடி-பெரியசாமி (04295-245100), பவானி ஏ.நாச்சிமுத்து ( 04256-232433), அம்மாபேட்டை-எம்.தங்கவேல் (04256-229919), அந்தியூர்-கே.உமாபதி (04256 - 263353) எனத் தெரிவித்துள்ளார்.

## கத்திரி நாற்றுகள், முருங்கை விதைகள் விற்பனை...

First Published : 07 Sep 2012 01:02:25 PM IST

திருச்சி, செப். 6 : திருச்சி மாவட்டம், சிறுகமணியில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில் கத்திரி நாற்றுகள் விற்பனைக்கு தயாராக உள்ளன.

இதுகுறித்து வேளாண் அறிவியல் நிலையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: சிறுகமணியில் உள்ள வேளாண் அறிவியல் நிலையம் விவசாயிகளின் நலனுக்காக அவ்வப்போது புதிய விஞ்ஞான தொழில்நுட்பங்களையும், பயிற்சிகளையும் அளித்து வருகிறது.

அதேபோன்று, விவசாயிகளுக்கு தேவையான தரமான விதைகள், நாற்றுகள் போன்றவற்றையும் உற்பத்தி செய்து விநியோகித்து வருகிறது.

தற்போது விருஞ்சிபுரம் 1 (விஆர்எம் 1) ரக கத்திரி நாற்றுகள் (குழித்தட்டு நாற்றுகள்) ஒரு நாற்று 40 பைசாவுக்கும், பெரியகுளம் 1 (பிகேஎம் 1) ரக முருங்கை விதை 100 கிராம் ரூ. 150-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

தேவைப்படும் விவசாயிகள் வேளாண் அறிவியல் நிலையத்தை நேரடியாக அணுகி தேவைப்படும் அளவுக்கேற்றவாறு முன்பணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம் என செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சம்பா சாகுபடி: தேவையான உரங்கள் கையிருப்பு

First Published : 07 Sep 2012 01:02:13 PM IST

திருச்சி, செப். 6: திருச்சி மாவட்டத்தில் சம்பா பருவத்துக்கு தேவையான உரங்கள் கையிருப்பில் உள்ளதாக மாவட்ட ஆட்சியர் ஜெயஸ்ரீ முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

திருச்சி மாவட்டத்தில் சம்பா மற்றும் தாளடி 62,500 ஹெக்டேரில் சாகுபடி செய்யத் திட்டமிட்டப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான உரங்களான டிஏபி, யூரியா, பொட்டாஷ், காம்ப்ளக்ஸ் உரங்கள் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்களில் போதிய அளவில் இருப்பில் வைக்கப்பட்டுள்ளன.

மேலும், கிரிப்கோ நிறுவனத்திலிருந்து வந்த 2650 மெ.டன் யூரியா, 1600 மெ.டன் டிஏபி உரம் அனைத்து வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இதனுடன் சேர்த்து 4780 மெ.டன் யூரியாவும், 2800 மெ.டன் பொட்டாஷும் இருப்பில் உள்ளன. மேலும், இந்த வாரஇறுதிக்குள் கிரிப்கோ நிறுவனத்திலிருந்து 5000 மெ.டன் யூரியா திருச்சி மாவட்டத்திற்கு வர உள்ளது. உரம் குறைபாடு சம்பந்தமான குறைபாடுகள், புகார்களை திருச்சி வேளாண் இணை இயக்குநர் அலுவலகத் தொலைபேசி எண் 0431-2420554, தரக்கட்டுப்பாடு உதவி இயக்குநரின் செல்போன் எண் 9585598909 ஆகியவற்றில் தெரிவிக்கலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## மேட்டூரில் நீர்மட்டம் உயர்ந்ததால் மறைந்த இரட்டைக் கோபுரங்கள்

First Published : 08 Sep 2012 01:51:32 AM IST

மேட்டூர், செப்.7: மேட்டூர் அணையில் நீர்மட்டம் உயர்ந்து வருவதையடுத்து, வெளியே தெரிந்த கிறிஸ்தவ ஆலய இரட்டைக் கோபுரங்கள் நீரில் மூழ்கின.

மேட்டூர் அணை கட்டப்பட்ட போது அணைப் பகுதியில் இருந்த நூற்றுக்கணக்கான கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு, வேறு பகுதிகளில் குடியமர்த்தப்பட்டனர்.

அந்தக் கிராமங்களில் இருந்த வழிபாட்டுத் தலங்களில் கோட்டையூர் திப்பு சுல்தான் கோட்டை, பண்ணவாடி ஜலகண்டேசுவரர் கோயில், கிறிஸ்தவ ஆலய இரட்டைக் கோபுரங்கள், கீரைக்காரனூர் சோழவாண்டி வீரபத்திரன் கோயில் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் உயரும்போது இந்த வழிபாட்டுத் தலங்கள் நீரில் மூழ்கி விடும். நீர்மட்டம் 76 அடிக்கு கீழே குறையும் போது ஒவ்வொன்றாக வெளியே தெரியத் தொடங்கும். அப்போது சுற்றுலாப் பயணிகள் இவற்றைக் காண பண்ணவாடி பரிசல் துறைக்கு வந்து செல்வார்கள்.

கடந்த ஜூலை மாதம் 8-ம் தேதி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 76 அடியாக இருந்தது. அப்போது பண்ணவாடி பரிசல்துறைப் பகுதியில் கிறிஸ்தவ ஆலய இரட்டைக் கோபுரங்கள் வெளியே தெரிந்தன. தற்போது அணையின் நீர்மட்டம் 78 அடிக்கு மேலே உயர்ந்துள்ளதால், இரட்டைக் கோபுரங்கள் நீருக்குள் மூழ்கின.

**மேட்டூர் அணை தண்ணீரில் இரட்டை கோபுரங்கள் மூழ்கின**



*02:35:32*

Saturday

2012-09-08

மேட்டூர்: மேட்டூர் அணையின் நீர்மட்டம் 78 அடியாக உயர்ந்தது. இதையடுத்து பண்ணவாடி பரிசல் துறையில் உள்ள இரட்டை கோபுரங்கள் தண்ணீரில் மூழ்கின.மேட்டூர் அணை கட்டப்பட்ட போது, மேட்டூர் அணை முதல் ஒகேனக்கல் வரையுள்ள கிராமங்கள் அணையின் நீர்த்தேக்க பகுதிகளாக அறிவிக்கப்பட்டது. இதனால் அங்கு வசித்தவர்கள் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தப்பட்டனர். இதையடுத்து நீர்தேக்கப் பகுதிகளில் இருந்த கோயில் களை இடிக்காமல் அப்படியே விட்டு சென்றனர். கீரைக்காரனூரில் உள்ள சோழவாண்டி வீரபத்திரன் கோயில், பண்ணவாடி பரிசல்துறையில் உள்ள கிறிஸ்தவ தேவாலயம், மிகப்பெரிய நந்தியுடைய ஜலகண்டேஸ் வரர் கோயில், மீனாட்சியம்மன் கோயில் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. அணையின் நீர்மட்டம் அதிகரிக்கும்போது இந்த கோயில்கள் தண்ணீரில் மூழ்கிவிடும்.

இந்நிலையில் மேட்டூர் அணையின் நீர்மட்டம் நேற்று 78.24 அடியாக உயர்ந்தது. இதையடுத்து பண்ணவாடி பரிசல் துறையில் உள்ள கிறிஸ்தவ ஆலயத்தின் இரட்டை கோபுரம் தண்ணீரில் மூழ்கியது. நேற்று மாலை 4 மணி நிலவரப்படி அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 7,613 கனஅடியாக இருந் தது. ஈரோடு, நாமக்கல், கரூர் மாவட்டங்களின் குடிநீர் தேவைக்காக அணையில் இருந்து 2 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. நீர் இருப்பு 40.22 டிஎம்சியாக இருந்தது.

**ÙS¥¨eh FeL†ÙRÖÛL YZjhY‰ ÚTÖXÚY**
**L£•“eh FeL†ÙRÖÛL HeL£eh ¤.25 B›W• YZjL ÚY□|•**
**“‰oÚN¡ L£•“ «YNÖ›L· NjL• ÚLÖ¡eÛL**

“‰oÚN¡, ÙN• .8-

ÙS¥¨eh FeL† ÙRÖÛL YZjhY‰ ÚTÖXÚY L£•“eh• FeL†ÙRÖÛLVÖL B• | JÁ¿eh He L£eh ¤.25 B›W• YZjL ÚY□|• GÁ¿ “‰oÚN¡ L£•“ «YNÖ›L· NjL• ÚLÖ¡eÛL «|†‰· [‰.

NjL iyP•

“‰oÚN¡ L£•“ «YNÖ› L· NjL ÙTÖ£□TÖ[ŸL· iyP• «¥¦VÅ¡¥ E·[ “‰oÚN¡ «YNÖ›L· NjL RÛXÛU A¨YXL†‡¥ SP‹R‰.

iyP†‡¥ ˜Á]Ö· AÛUoNŸ BŸ.«rYSÖRÁ, “‰oÚN¡ «YNÖ›L· NjL ÙTÖ‰ ÙNVXÖ[Ÿ gRSÖRÁ, RÛXYŸ UÖpXÖU,, TÖ¥ E¼T†‡VÖ[ŸL· NjL ÙTÖ‰ ÙNVXÖ[Ÿ ÙT£UÖ·, L£•“ «YNÖ›L· NjL ÙTÖ¿□TÖ[ŸL· L¦ˆŸ† RÖ· h□T• W«., ÙLÖ•TÖe L• ÉYÖ]‹R•, N‹ÛR “‰eh□T• R]”T‡, LÛW ÚU| LÚQNÁ, ‘·Û[VÖŸ h□T• C£N□TÁ, ‡£“YÛ] LÖŸ†‡ÚLVÁ, J‡V•Ty| hQÚNLWÁ, ÙLÖ†R“¡S†R• h□“NÖ–, ÙLÖ•TÖeL• r□ ‘WU,VÁ,Ù^VLÖ‹RÁ, N‹ÛR “‰eh□T• NÖ–SÖRÁ E·TP TXŸ LX‹‰ ÙLÖ□ P]Ÿ.

iyP†‡¥ ŒÛ\ÚY¼\□ TyP ˆŸUÖ]jL· Y£ UÖ¿:-

¤ .4 B›W•

*“‰oÚN¡›¥ E·[ A¡ïŸ NŸeLÛW BÛX C.I.z. TÖ¡›Á ŒŸYÖL• L£•“ PÁ JÁ¿eh ¤ 2 B›W˜•, ¦jLÖÙWyz□ TÖÛ[V• “‰oÚN¡ iy|\° NŸeLÛW BÛX›¥ PÁ JÁ ¿eh ¤ 2,200 • RW• T| f\‰.

*JÚW UÖŒX†‡¥ C£ «R UÖ] «ÛX E·[‰. G]ÚY UÖŒX†‡¥ JÚW «ÛX ÙLÖ·ÛLÛV AU¥T|†R ÚY□|•. R¼ÚTÖ‰·[ EW• , C| ÙTÖ£yL· «ÛX EVŸ°, ÙYy|• i¦, ÚYÛX VÖyL· i¦ TX UPjh EVŸ‹‰·[ LÖWQ†‡]Ö¥ CÛYLÛ[ LQef¥ ÙLÖ□| L£•“ PÁ JÁ ¿eh ¤ 4 B›W• YZjL ÚY□|•.

UÖÂV•

*L£•“ CÁsWÁÍ AÛ]Y£eh• ŒŸYÖLÚU LyP ÚY□|•. L£•“ T›Ÿ G‹R YÛL›¥ ÚNR• AÛP‹RÖ¨• CÁsWÁÍ ˜µÛUVÖL fÛPeL Y³ YÛL ÙNšV ÚY□|•.

*«YNÖ›L· RjL· ŒX†‡Á RÁÛUeÚL¼T T›¡|• L£•ÛT ŒŸYÖL• AjgL¡eLÚY□|•. ŒŸYÖ L• C‹R WL†ÛR RÖÁ T›¡P ÚY□|• GÁ¿ «YNÖ›LÛ[ LyPÖV□ T|†‰• ÚTÖefÛ] ÛL «PÚY□|•.

* LP‹R LÖX†‡¥ «ÛR “¥¨eh UÖÂV• ÙLÖ|e L□TyP‰ ÚTÖXÚY G‡Ÿ Y£• LÖX†‡¨• «ÛR “¥ ¨eh UÖÂV• YZjL ÚY□|•.

¤ 25 B›W•

* ÙS¥¨eh FeL† ÙRÖÛL YZjhY‰ ÚTÖXÚY L£•“eh• FeL†ÙRÖÛL VÖL Y£P• JÁ¿eh HeL £eh ¤.25 B›W• YZjL ÚY□|•.

* ŒŸYÖL†‡¥ U□PX A‡LÖ¡ E·[‰ ÚTÖX «YNÖV ‘W‡Œ‡L· APj fV U□PX «YNÖV hµ AÛUeL□TP ÚY□|•.

ÙTÖ‰ L£†‰

* L£•“ ÙYy|• i¦ HeL£eh TÁ UPeh A‡LUÖf□·[‰. ÙRÖ³ XÖ[Ÿ T¼\ÖehÛ\ ŒX° f\‰. G]ÚY “‰oÚN¡ AWr 100 SÖ· ÚYÛX YÖš□“ ‡yP†‡Û] ŒÛ\ÚY¼¿• ÚTÖ‰ U□PX «YNÖV NjL ‘W‡Œ‡LÛ[ LX‹‰ ÚTp J£ ÙTÖ‰ L£†ÛR E£YÖef ARÁ Az□TÛP ›¥ L£•“ ÙYyP ÚRÛYVÖ] ÙRÖ³XÖ [Ÿ LÛ[ «YNÖV ÚYÛXeh ˜ÁÄ¡ÛU A¸eL ÚY□|•. ÙRÖ³XÖ[Ÿ L¸Á ÚYÛXe LÖ] N•T[† ‡¥ TÖ‡ÛV «YNÖ›L· ÙLÖ|□TÖŸL·. C†‡y P†ÛR AWr AU¥ T|†R ÚY□|•.

* ¦jLÖ ÙWyz□TÖÛ[V• “‰oÚN¡ iy|\° NŸeLÛW BÛX›¥ ÙYyz AÄ□‘V L£•“eh EP]zVÖL TQ• Ty|YÖPÖ ÙNšV ÚY□|•.

CXYN NŸeLÛW

* ˆTÖY¸T□zÛLÛV ˜ÁÂy| «YNÖ›Lºeh ÚTÖ]NÖL PÁ JÁ¿eh J£ fÚXÖ NŸeLÛWÛV CXYNUÖL YZjL ÚY□|•.

* U□PX• YÖ¡VÖL L£•“ «YNÖ›L· AÛU□ ‘Û] E£YÖehY‰. GÁT‰ E·TP TX ˆŸUÖ]jL· ŒÛ\ÚY¼\• TyP].

**LŸSÖPL†‡¥**
**LÖ¥SÛPL· LQeÙL|□“ T, 15-‹ ÚR‡ ÙRÖPjhf‰**
**12 B›W• F³VŸL· D|T|f\ÖŸL·**

ÙTjL»Ÿ, ÙN• .8-

LŸSÖPL†‡¥ LÖ¥SÛPL· LQeÙL|□“ T, Y£f\ 15-‹ÚR‡ ˜R¥ J£ UÖR• SÛPÙT\ E·[‰. C‡¥, 12 B›W• F³VŸL· D|T|†R• T|f\ÖŸL·.

LŸSÖPL LÖ¥SÛP ‰Û\ BÛQVŸ A›Â ÛNV† N¦• ÙTjL»¡¥ ÚS¼¿ Œ£TŸLºeh ÚTyz A¸†RÖŸ. A□ÚTÖ‰ AYŸ i½VRÖY‰:-

19-Y‰ LÖ¥SÛPL· LQeÙL|□“ T,

SÖyz¥ LÖ¥SÛPL· LQeÙL|□“ T, 5 B□|Lºeh J£˜Û\ SP‹‰ Y£f\‰. R¼ÚTÖ‰ 19-Y‰ LÖ¥SÛPL· LQeÙL|□“ T, Y£f\ 15-‹ÚR‡ ÙRÖPjf A|†R UÖR• (AeÚPÖTŸ) 15-‹ÚR‡ YÛW J£ UÖR• SPef\‰. LŸSÖP†‡¨• C‹R LQeÙL|□“ T, SÛPÙT¿f\‰.

C‹R LQeÙL|□‘ÁÚTÖ‰ LÖ¥SÛPL¸Á YV‰, TÖ¦]•, rLÖRÖW• ÚTÖÁ\ «YWjL· ÚNL¡eL□T|•. ÚU¨• LÖ¥SÛPL¸Á TWÖU¡□“eLÖL TVÁT|†R□T|• L£«L· T¼½V RLY¨• ÙT\□T|•.

12 B›W• F³VŸL·

C‹R T,eLÖL ¤.10 ÚLÖz ÙNXY³eL□T|•. C‹R Œ‡ÛV U†‡V AWr YZjh•. UÖYyPjL·, RÖ¨LÖeL·, fWÖUjL· ÚRÖ¿• ®|, ®PÖL ÙNÁ¿ LQeÙL|□“ SP†R□T|•. Tr, LÖÛ[, ÙY·[Ö|, ÙN•U½ B|, h‡ÛW, UyP h‡ÛW, ÚLÖÚY½ LµÛR, JyPL•, TÁ½, SÖš, ˜V¥, ÚLÖ³, YÖ†‰ BfVÛY LQeÙL|eL□T|•. C‰R«W C‹R RPÛY “‡RÖL VÖÛ]□• ÚNŸeL□Ty| E·[‰.

C‹R LQeÙL|□“ T,›¥ 12 B›W• F³VŸL· D|T|YÖŸL·. LÖ¥SÛP, Y£YÖš, TtNÖV†‰, L¥«, ÙT□L· U¼¿• hZ‹ÛRL· SX†‰Û\ E·TP T¥ÚY¿ ‰Û\L¸Á ER«□PÁ C‹R LQeÙL|□“ T, ÚU¼ÙLÖ·[□T|•. SLŸ□“\jL¸¥ 2 B›W• ®|Lºeh J£YŸ, fWÖU□“\jL¸¥ 1,500 ®|Lºeh J£YŸ, UÛX□Th‡L¸¥ 1,000 ®|Lºeh J£YŸ GÁ\ ®R†‡¥ F³VŸL· ŒV–eL□Ty| E·[]Ÿ.

TVÁL·

LŸSÖPL†‡¥ ÙUÖ†R• 1 ÚLÖzÚV 35 XyN• ®|L¸¥ C‹R LQeÙL|□“ SP†R□TP E·[‰. C‹R LQeÙL|□“ LÖ¥SÛP NÖŸ‹R ÙLÖ·ÛL ˜z° G|□T‰, SX†‡yPjL· ÙNV¥T|†‰Y‰ ÚTÖÁ\Y¼¿eh –L°• ER«VÖL C£eh•. G]ÚY SLW U¼¿• fWÖU□“\jLºeh LQeÙL|eL Y£• F³VŸLºeh ÙTÖ‰UeL· Rh‹R J†‰ÛZ□“ A¸eh•Tz ÚLy|e ÙLÖ·fÚ\Á.

CªYÖ¿ A›Â ÛNV† N¦• i½]ÖŸ. LP‹R 2007-• B□| SP‹R LQeÙL|□‘ÁTz LŸSÖPL†‡¥ 3 ÚLÖzÚV 28 XyN• LÖ¥SÛPL·, 4 ÚLÖzÚV 24 XyN• ÚLÖ³, YÖ†‰ ÚTÖÁ\ T\ÛYL· C£□T‰ ÙR¡VY‹‰ E·[‰.